14th November 1957]

SRI K. G. PALANISAMI GOUNDAR : வெள்ளாள கவுண்டர்களை பின்தங்கிய வகுப்பினர் ஜாபிதாவில் சேர்க்க வேண்டுமென்று பலதடவைகள் விண்ணப்பித்துக் கொள்ளப்பட்டும் அவர்கள் சேர்க்கப்படவில்லை. குறிப்பாக எங்கள் தாலூக்காவிலே பல வெள்ளாளர்கள் கிருஸ்துவ வகுப்பிலே சேர்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

THE HON. SRI P. KAKKAN : சர்க்காருக்கு அது ஒன்றும் தெரியாது. ஒரு சமூகத்தில் கொஞ்சம் ஏழைகள் இருக்கிறார்கள் என்பதை வைத்து மட்டும் இப்படி செய்யமுடியாது.

SRI P. S. CHINNADURAI : சில பிரத்தியேகமான சலுகைகள் அளிக்கப்படுவதன் காரணமாக, முன்னேறிய வகுப்பினர்கள் கூட பின்தங்கிய வகுப்பினர்கள், மிகவும் பின்தங்கிய வகுப்பினர்கள் ஜாபிதாவில் சேர்ந்து கொள்ளுவதற்கு ஆசைப்படுவதால் அது அபாயம் அல்லவா ? அதனால் இந்த ராஜ்யத்தில் இருக்கக்கூடிய பெரும்பாலான மக்கள் பிற்பட்ட அல்லது மிகவும் பிற்பட்ட மக்கள் என்ற நிலைமைக்கு வந்துவிடக்கூடும் அல்லவா ?

THE HON. SRI P. KAKKAN : மிகவும் முற்போக்கிலுள்ள சமூகத்தினர் பிற்போக்கு வகுப்பைச் சேர்ந்தவர் என்று சொல்லுவது மிகவும் வெறுக்கத்தக்கது. இருந்தாலும், சமுதாயத்திலுள்ள நிலைமையை வைத்துத்தான் கல்வித் துறையிலே இவர்கள் முன்னேற்றம் அடைய வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

Southern Zonal Council

* 161 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that the following subjects were discussed at the end of the South Zonal Council meeting held in September 1957 at Hyderabad;

(i) the question of increasing the salaries of the non-gazetted officers of the States;

(ii) the question of fixing a ceiling on landholdings;

(iii) the tapping of water resources of the States in the region particularly Parambikulam, Godavari and Krishna waters and Palar river;

(*b*) if so, whether a statement showing the decisions reached will be placed on the table of the House; and

(*c*) the action taken thereon?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Questions connected with the salaries of Non-Gazetted Government Officers, fixing of a ceiling on land-holdings, and the utilization of the waters of the Krishna and the Godavari for the benefit of the Madras State were generally discussed.

(*b*) & (*c*) As the discussions related to many inter-State problems of a delicate nature, it will not be in the public interest to disclose them. But if any major decisions affecting this State are reached, the Government will keep the Legislature informed.

[14th November 1957

Sri N. K PALANISAMI : தென் பிராந்திய என்.ஜி.ஓக்களைப் பொறுத்தமட்டில் ஹைதராபாத்தில் அவர்களுடைய குறைகளை பரிசீலனை செய்வதாக முடிவெடுக்கப்பட்டது. அதன் அடிப்படையில் தென் பிராந்தியத்தைச் சேர்ந்த அரசாங்கங்கள் அது விஷயமாக பரிசீலனை செய்வதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்று கேட்க விரும்புகிறேன்?

The Hon. Sri C. SUBRAMANIAM : இதுபற்றி பொதுவாக விவாதம் இருந்ததே ஒழிய ஒரு முடிவும் ஏற்படவில்லை. இதுபற்றி பரிசீலனை செய்ய வேண்டுமா என்பது பற்றியும் ஒருவிதமான முடிவும் ஏற்படவில்லை.

Sri M. KALYANASUNDARAM : சர்க்கார் ஊழியர்களுடைய சம்பள விஷயம் கூட இரண்டு ராஜ்யங்களுக்கு மிடையே சம்பந்தம் உள்ள விஷயம் என்று சர்க்கார் கருதுகிறதா ? எந்தக் காரணத்தினால் இந்தப் பிரச்னை 'ஜோனல் கவுன்சிலில்' விவாதிக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்?

The Hon. Sri C. SUBRAMANIAM : இப்பொழுது பக்கத்தில் இருக்கக் கூடிய ராஜ்யத்திலே கொஞ்சம் அதிகமான சம்பளம், இன்னொரு பக்கத்திலே குறைவான சம்பளம் இருக்குமானால், அந்த அளவுக்கு அதிருப்தி ஏற்படுகிறது. இப்பொழுது மத்திய சர்க்கார் சம்பள விகிதத்திற்கும், ராஜ்ய சர்க்கார் சம்பள விகிதத்திற்கும் வித்தியாசம் இருப்பதால் ஏற்பட்டிருக்கிற அதிருப்தி ஒருபுறம் இருக்க, அண்டை ராஜ்யங்களில் வெவ்வேறு விதமான சம்பள விகிதம் என்று இருந்தால் மேலும் அதிருப்தி ஏற்படுகின்ற காரணத்தினால், இந்தப் பிராந்தியம் பூராவும் ஒரே சம்பள விகிதத்தை நிர்ணயிக்க முடியுமா என்பது பற்றி பொதுவாக விவாதிக்கப்பட்டது.

Sri A. A. RASHEED : Is there any proposal to bring the waters of the Krishna and the Godavari to the Palar and, if so, when will that proposal be considered for implementation?

The Hon. Sri C. SUBRAMANIAM : There is a proposal for the utilization of the waters of the Krishna and the Godavari for the Madras State. But to answer the question when that proposal will be considered for implementation, I think a little knowledge of astrology is required.

Sri A. V. P. ASAITHAMBI : மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கும் மாகாண சர்க்கார் ஊழியர்களுக்கும் வித்தியாசமான சம்பளம் போன்றவைகள் இருப்பதை நீக்குவதற்கு, ஒன்று மத்திய சர்க்கார் தங்கள் ஊழியர்கள் சம்பளத்தைக் குறைத்துக்கொள்ள முன்வரவேண்டும், அல்லது மாகாண சர்க்கார் தங்கள் ஊழியர்களின் சம்பளத்தை கூட்டுவதற்குரிய உதவியையாவது மத்திய சர்க்கார் செய்யவேண்டும். இந்த அளவுக்குச் செய்ய சர்க்கார் அவர்களை வற்புறுத்துவார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இந்த யோசனைகளை கூறியதற்கு நான் ரொம்பவும் நன்றி செலுத்துகிறேன். இந்தக் கேள்வியில் அங்கத்தினர் கேட்ட பிரச்னை எழுவது கிடையாது.

Sri S. LAZAR : ஜோனல் கவுன்சிலுக்கு நமது அரசாங்கத்தின் பிரதிநிதிகளாகச் செல்லுபவர்களுக்கு ஆலோசனை சொல்லக்கூடிய முறையிலே சட்டசபை உறுப்பினர்கள் அடங்கிய ஒரு அட்வைஸரி கமிட்டி ஏற்படுத்துவதாக சர்க்காருக்கு உத்தேசம் இருக்கிறதா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இதுவரையிலும் அதுபற்றி ஆலோசனை செய்யவில்லை.

Sri A. GOVINDASAMY : இந்த சம்பள நிலைமையைப் பற்றி ஜோனல் கவுன்சில் முடிவுதான் முடிவானதா ? அல்லது மத்திய சர்க்காரின் அனுமதியின் பேரில் அது அங்கீகரிக்கப்படுமா ?

14th November 1957]

THE HON. SRI C. SUBRAMANIAM : ஜோனல் கவுன்சிலில் ஒரு முடிவும் செய்யவில்லை, பொதுவாகத் தான் விவாதித்தோம் என்று திரும்ப திரும்ப சொன்னேன். ஏதோ முடிவு ஏற்பட்டதாக வைத்துக் கொண்டு, அந்த முடிவு எப்படி அமுல் செய்யப்படும் என்பது பற்றி அதற்குமேல் கேள்வி கேட்கப்படுகிறது.

SRI T. S. RAMASWAMI PILLAI : இந்த மண்டலத்தி லுள்ள ராஜ்யங்களிலுள்ள சர்க்கார் சிப்பந்திகளின் சம்பளத்தைப்பற்றி பொதுவாக ஆலோசிக்கப்பட்டதே தவிர ஒன்றும் முடிவு செய்யப்படவில்லை என்று கனம் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். முடிவு ஒன்று எடுக்கா விட்டாலும், இதைப்பற்றி பரிசீலனை செய்வதற்கு ஒரு கமிஷன் ஏதாவது ஏற்படுத்துவது பற்றி ஆலோசிக்கப்பட்டதா ? அல்லது எல்லாவற்றையும் விட உயர்ந்த நிலையில் உள்ள சம்பள விகிதத்தை எல்லா ராஜ்யங்களிலும் ஒன்றாகக் கொடுப்பது பற்றி ஆலோசிக்கப்பட்டதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : பொதுவாக விவாதம் நடந் ததே ஒழிய இதுபற்றி எந்தவிதமான முடிவும் அங்கு எடுக்கவில்லை என்று முன்பே குறிப்பிட்டேன்.

SRI R. KRISHNASWAMY NAIDU : தென் பிராந்திய கவுன்சிலில் சோலையார், பம்பையார், கல்லாறு இவைகளினுடைய தண்ணீரை உபயோகப்படுத்துவது பற்றி பேசப்பட்டதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கேரளாவின் விஷயத்தைப்பற்றி முதல் கவுன்சில் கூட்டத்தில் இங்கு இருக்கக்கூடிய மந்திரி சபையும், அங்கு இருக்கக்கூடிய மந்திரி சபையும் கூடி ஆலோசிக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. அதனால் இரண்டாவது கூட்டத்தில் இந்த விஷயம் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

SRI N. K. PALANISAMI : நிலவரம்பு கட்டும் விஷயமாக மத்திய சர்க்கார் மாகாண சர்க்காருக்கு அதிகாரம் கொடுத்து இருக்கிறது. அந்த அடிப்படையில் நிலவரம்பு கட்டும் வகையில் ஏதாவது முடிவு செய்தார்களா ? 9-20 a.m.

THE HON. SRI C. SUBRAMANIAM : முடிவு எடுக்கவில்லை.

SRI K. RAMACHANDRAN : அமைச்சர் அவர்கள் பொது விவா தம் நடந்ததாகச் சொன்னார்கள். ஆனால் நிலவரம்பு கட்டுவது சம்பந்த மாக இந்த மன்றம் செய்கிற முடிவை அனுசரித்து நடவடிக்கை எடுப்பார் களா ? அல்லது அந்த கவுன்ஸில் முடிவுப்படியேதான் செய்யவேண்டுமா ? ஏற்கெனவேயே மலபாரில் அவர்கள் தனியாகச் செய்திருப்பது போல நாமும் செய்யலாமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஜோனல் கவுன்சில் முடிவு செய்வதில்லை. ஒவ்வொரு ராஜ்யத்தின் அநுபவத்தையும், அவர்களுடைய ஆலோசனையையும் ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொண்டு அதன் மூலமாக ஒவ்வொரு ராஜ்ய சர்க்காரும் சட்ட மன்ற ஆலோசனையின்படித்தான் முடிவு எடுக்கவேண்டும்.

Department of Statistics

* 162 *Q.*—SRI V. K. RAMASWAMY MUDALIAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the work done by the Department of Statistics in the year 1956–57; and

(*b*) the number of reports published during that period by this Department?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) A statement[a] is placed on the table of the House.

---

[a] Printed as Appendix on pages 300–305 infra.